# செய்திகளும் குறிப்புகளும்

**21.05.2026, ஆரோவில்வாசிகளுக்கான தமிழ் வார ஏடு, ஆரோட்ரடுக்ஷன், எண்: 1161**

---

**ஸ்ரீ அரவிந்தர்**

**பகவத்கீதை – பேருரைகள் - 19.சமதை**

ஆகவேதான், கரும யோகத்திற்குரிய அம்சங்களில், சமதையே மிக முக்கியமானதெனக் கீதை கொள்ளுகிறது. சுதந்திர ஆன்மா உலக விவகாரங்களில் சுதந்திரமாக ஈடுபடுவதற்கு இது இன்றியமையாததாகும். ஞானம், பற்றின்மை, குணங்குறியற்ற நிலை, இன்பம், இயற்கையின் தொழிற்பாட்டிலிருந்து விலகி நிற்றல், ஆகியவை உட்குவிந்து செயலற்றிருப்பின் இவற்றிற்கு சமதை அவசியமன்று. ஏனெனில், சமமும் சமமின்மையும் ஒன்றையொன்று எதிர்த்து நிற்கும்படியான விஷயங்களை இவை கவனிப்பதில்லை. ஆனால், சுதந்திர ஆன்மா இயற்கையின் தொழிற்பாட்டினால் காணும் பன்மைகள், தனித்தன்மைகள், வித்தியாசங்கள், பேதங்கள் ஆகிய வற்றையுணர்ந்து, அவற்றைச் சமாளிக்க ஆரம்பிக்கும் போதே, தனது சுதந்திர நிலைக்கு அடையாளமாகவுள்ள மேலே சொன்ன விஷயங்களை இச்சமதையின் மூலமாகக் காரியப்படுத்தவேண்டியதாகிறது. அது தனது இயற்கையைக் கருமம் செய்யவிடுவதாயின், கருமங்கள், பலன்கள், நிகழ்ச்சிகள், யாவற்றினும் பட்சபாதமற்ற சமதை கொண்டு தனது உயர்நிலையைக் காட்டவேண்டும்.

ஞான ஆர்வமுடையோனுக்கு, சமதை ஓர் அடையாளமும் சோதனையுமாகும். உள்ளத்தில் சமநோக்கு இல்லையேல், அவனது இயற்கையின் தொழிற்பாட்டில் ஏதோ சமமின்மை இருப்பது புலனாகிறது. பற்று, தனியிச்சை, தனியுணர்ச்சி, தனிச்செயல், தனி இன்ப துன்பங்கள் ஆகியவை தலைகாட்டுகின்றன. குழம்பிய மகிழ்ச்சி தோன்றுகின்றது. இது ஆத்மீக மகிழ்ச்சியல்ல; மனத்தின் சந்துஷ்டியேயாகும். மனத்தில் சந்துஷ்டி அல்லது திருப்தி ஏற்படும்போது, பின்னோடேயே அதில் அதிருப்தி ஏற்படுவதும் இயற்கை. ஆன்மா சமநிலை இழந்துவிடுமாகில், அது ஞானத்தினின்று வழுவுகின்றது எல்லாவற்றையும் தழுவுவதாயும், எல்லாவற்றையும் சமரசப்படுத்தி இணைப்பதாயுமுள்ள பிரம்மனின் ஒருமையில் நிலைத்திருந்த அவ்வான்மா தன் உறுதி இழக்கின்றது. கருமயோகி தான் கருமம் செய்கையிலும் சுதந்திர புருஷனாக இருப்பதை அறிவது இச்சமதையினாலேயே.

இந்த உன்னதமானதும், அகிலத்தின்மை பொருந்தி யதும், ஆத்மீக இயல்புடையதுமான சமதையே, இவ் விஷயத்தைக் குறித்த கீதையின் போதனைக்கு ஒரு தனிச் சிறப்பு அளிக்கின்றது. மனம் சமநிலை கொள்ளவேண்டு மென்னும் போதனை கீதைக்கே விசேஷமானதல்ல. சமதையானது தத்துவஞானத்தின் ஒரு லட்சியமாகவும், ஞானிகளின் சிறப்பியல்பாகவும் எப்போதுமே கருதப் பட்டுவந்திருக்கிறது. கீதை தத்துவஞானத்தின் இந்த லட்சியத்தை ஏற்றுக்கொண்டு, இதை விருப்பு வெறுப்புக்களின் சுழற்சிகளுக்கு அப்பாற்பட்ட மிக உன்னதமானதொரு நிலைக்கு உயர்த்தி, பூரண தன்னாட்சி யுடைய பரமனின் அமைதிக்கும் ஆனந்தத்திற்குமே கொண்டு செல்லுகின்றது. இந்த ஏற்றத்தில், விருப்பு வெறுப்பற்ற கிரேக்க வைராகிகளின் நிறையும் தத்துவ ஞானிகளின் நிறையும் முதல் இரண்டாம் படிகளேயாகும். கிரேக்க வைராகிகளின் சமதை, யாவற்றையும் வீரமுடன் சகித்துக்கொள்ளும் உயர் குணத்தின் மூலமாக அடையப் பெறும் தன்னாட்சியை ஆதாரமாகக் கொண்டது.

தத்துவஞானிகளின் சமதை, அதைவிட அமைதியும் இன்பமும் பொருந்தியது. அது, குழப்பங்களுக்குக் காரணமான இயற்கைக்குமேல், உயர் ஞானத்தில் உதாசீனமாக அமர்ந்திருப்பவன் மூலமாக அடையப் பெறும் தன்னாட்சியை ஆதாரமாகக் கொண்டது. கிறிஸ்தவ சமயிகளின் சமதை, யாவற்றையும் ஈசுவராதீன மாக விட்டுவிட்டு, சதாகாலமும் பக்திப்பரவசத்துடன் முழந்தாளிட்டுப் பொறுமையுடனிருப்பதேயாகும். வீரனின் சகிப்பு, ஞானியின் உதாசீனம், பக்தனின் கிதிட்சை (பொறுமை), ஆகிய இம்மூன்று வழிகளும் இறைவனின் அமைதியை அடைவதற்குரிய மூன்று படிகளாகும். கீதை இவைகளையெல்லாம் ஏற்றுக் கொண்டு, விரிவாகத் தொகுத்து, மேல்நோக்கிச் செல்லும் ஆன்மாவின் ஓர் இயக்கமாகவே ஆக்குகின்றது. ஆனால், அது இவை ஒவ்வொன்றுக்கும் ஒரு ஆழ்ந்த, சர்வசம்மதமான, உத்கிருஷ்டமான பொருள் தருகின்றது. ஒவ்வொன்றுக்கும், சாதாரண குணத்திற்கும் அறிவுக்கும் உணர்ச்சிகளுக்கும் மேம்பட்ட ஆத்ம சேதனத்தின் மதிப்பை அளிக்கின்றது.

சாதாரண மானிட ஆன்மா தனது இயற்கையின் வாழ்க்கையில் வழக்கமாக வரும் குழப்பங்களில் இன்புறுகின்றது. அது இவ்விதம் இன்புறுவதாலும், கீழியற்கையின் குழப்பம் பொருந்திய விளையாடல்களுக்கு அது அனுமதியளிப்பதாலுமே இவ்விளையாடல்கள் நிரந்தரமாக நடைபெறுகின்றன. ஏனெனில், இயற்கை தன் காதலனும் போகியுமாகிய புருஷனுடைய (ஆன்மாவினுடைய) இன்பத்திற்காக இன்றியும் அனுமதி இன்றியும் யாதொன்றையும் செய்வதில்லை. ஆயினும், இவ்வுண்மையை நாம் அறிந்து கொள்வதில்லை. ஏனெனில், குழப்பம், துக்கம், அசௌக்கியம், துரதிருஷ்டம், தோல்வி, நிந்தனை, மானக்கேடு ஆகியவை ஏற்படும்போது, மனம் இவற்றினின்றும் பின்வாங்கி, இவற்றிற்கு நேர் எதிரான இன்பம், அதிருஷ்டம், வெற்றி, பெருமை, புகழ் முதலியவற்றைத் தழுவ முற்படுகின்றது. ஆயினும், நமது கீழ்த்தர ஆன்மா இன்பதுன்பங்கள் கலந்த சாதாரண வாழ்க்கையில் இன்புறுகின்றது என்பது உண்மையே. கலப்பற்ற ஒரே ரீதியான இன்பமும், போராட்டமில்லாமல் எளிதில் வரும் வெற்றியும், சிறிது காலத்திற்குப்பின் அதற்குப் புளித்துப்போய்விடுவதால், அது இன்பத்திற்கு நேர் எதிரியான துன்பத்தையும் சுவைக்கின்றது. மனத்தின் இருமைகளால் இவ்வுண்மை பாதிக்கப்படாமல் ஒருபடியாயிருக்கின்றது.

இக்குழம்பிய வாழ்க்கையிலிருந்து எழும்பி கலப்பற்ற பேரின்ப நிலையை அழைக்கப்பட்டால், அது அவ்வழைப்பிலிருந்து அருவருப்புடன் பின்வாங்குகின்றது. அப்பேரின்ப வாழ்க்கையில் அதற்கு நம்பிக்கையில்லை. அது தனக்குப் பழக்கமான பலதிறப்பட்ட இகலோக வாழ்க்கையைப் போலாகாதென்றும், அது சுவையற்றதென்றும் கொள்ளும். கீழ்த்தர இயற்கை தரும் இன்பம் தனக்குப் பழக்கமானதாயும் உருப்படியானதாயும் இருப்பதால் ஆத்மீகப் பெருவாழ்வின் இன்பமும் சக்தியும் உண்மையா யிருக்கக்கூடுமோ எனவும் அது ஐயங்கொள்ளும். ஆகவே, தனது சொந்த நிலையிலிருந்து மேலேற அது இஷ்டப் படுவதில்லை. ஆயினும், இக்கீழ்த்தரமான திருப்தியுங் கூட பயனற்றதல்ல. தமோகுணத்தின் அறியாமையிலும் செயலற்ற மந்தத்திலும் ஊறியுள்ள மானிட இயற்கை, பரிணாமமடைந்து மேலேறுவதற்கு இதுவும் இன்றியமையாததொரு நிலைமையே. பரஞானத்தையும் உயர்சக்தியையும் பேரின்பத்தையும் நோக்கிப் படிப்படியாக ஏறும் மனிதனின் ராஜசிக நிலையே இது. ஆனால், இதே நடுத்தரமான நிலையில் நிரந்தரமாக நின்றுவிடுவோமாயின், நமது ஏற்றம் முடிவடையாமல் நின்றுவிடும்; ஆன்மாவின் பரிணாமமும் அரைகுறையாக நின்றுவிடும். சாத்துவிகக் குணத்தின் மூலமாகச் சென்று, பின்னர் முக்குணங்களுக்கப்பாலுள்ள உயர்நிலையை எய்துவதே ஆன்ம நிறைவுக்குரிய வழியாகும்.

மனத்திலும் உள்ளத்துணர்ச்சிகளிலும், ஆன்மாவிலும் சமதை அமைவதற்கான இயக்கமே கீழியற்கையின் குழப்பங்களினின்று நம்மைக் கரையேற்றிவிடும் இயக்கமாகும்.

*(தொடரும்.....)*

Matrimandir

## 2026 மே மாதச் செய்திமடல்



கோடைக்காலம் நம்மை வந்தடைந்துள்ளன; நிலம் வெப்பமடைந்து வருகிறது, வசந்த காலத்தின் இதமான தென்றல் கோடைக்கால வெப்பமான காற்றாக மாறி நம்மைத் தழுவிச் செல்கிறது..

ஏற்கனவே 2028-ஆம் ஆண்டை எதிர்நோக்கிப் பயணித்துக்கொண்டிருக்கிறோம், ஸ்ரீ அன்னையின் 150-வது பிறந்தநாள் மற்றும் ஆரோவில்லின் 60-வது பிறந்தநாள் - மாத்ரிமந்திரின் பல அம்சங்களை முடிந்தவரை முடிப்பது; நிறைவு செய்வது அல்லது நிறைவு பெறும் நிலைக்கு கொண்டு வருவது என மாத்ரிமந்திர் குழு இலக்கு நிர்ணயித்துள்ளது.

தோட்டங்களுக்கான இலக்கு நல்ல முன்னேற்றத்தில் உள்ளது. நல்லிணக்கத் தோட்டம் அமைக்கும் பணியில் (The Garden of Harmony) இப்போது நல்ல முன்னேற்றம் காணப்படுகிறது, இளமைத் தோட்டத்தில் (Garden of Youth) நிலத்தடி அறையைக் கட்டும் பணி தொடங்கப்பட்டுள்ளது, மேலும் பரிபூரணத் தோட்டத்திற்கான (Garden of Perfection) திட்டமிடலும் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

மாத்ரிமந்திரின் மேல், அசையும் தங்கக் கதவுகளுக்கான புதிய கட்டுப்பாட்டுக் கருவிகளை நிறுவுவதற்கான ஏற்பாடுகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. (இந்த வளைந்த கதவுகள் ஒவ்வொரு தூணின் படிகளுக்கு இடையிலிருந்து மேல்நோக்கி நகர்ந்து, வழவழப்பான தங்கப் பலகைகளால் ஒவ்வொரு நுழைவாயிலையும் மூடுகின்றன என்பதை நினைவில் கொள்க.) சென்னை ஐஐடி தொழில்நுட்ப நிறுவனம், இக்கதவுகளில் முதலாவதற்கான கட்டுப்பாட்டுக் கருவிகளை வடிவமைத்து, மோட்டாரை நிறுவும் பணியை முன்னின்று நடத்தி வருகிறது; இது கோடைக்காலத்தின் நடுப்பகுதியில் செயல்பாட்டுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாத்ரிமந்திர் மற்றும் அதன் தோட்டங்களைச் சுற்றி, ஏரித் திட்டம் அதிவேகமாக நடைபெற்று வருகிறது. இந்த ஆண்டு இறுதிக்குள், புதிதாகத் தோண்டப்பட்ட 300 மீட்டர் நீளமுள்ள ஏரியின் இரண்டாவது பகுதியில் நீர்ப்புகா அடுக்குகளைப் பொருத்துவதே இதன் நோக்கமாகும். ஏரிப்படுகையின் இந்தப் பகுதியை முழுமையாக மூடுவதற்கு, 40,000 சதுர மீட்டர் பரப்பளவுள்ள எச்டிபிஇ (HDPE) மென்படலம் முழுவதையும், அதற்கு மேலும் கீழும் உள்ள வெள்ளை நிற ஜியோடெக்ஸ்டைல் பாதுகாப்பு அடுக்குகளுடன் சேர்த்து, கவனமாக விரித்து ஒன்றாகப் பற்றவைக்க வேண்டும்.

ஏரியின் மேற்கு முனையில், வரும் மாதங்களில் 10 மீட்டர் உயரமுள்ள ஒரு புதிய கான்கிரீட் சுவர் கட்டப்பட உள்ளது. இதன் மூலம், நீர்ப்புகாமல் செய்யப்பட்ட பிறகு, ஏரியின் இந்தப் பகுதி குளிர்காலப் பருவமழையின் வழிந்தோடும் நீரைச் சேகரிக்க முடியும்.

கோடை மாதங்களில் எங்களின் முக்கியக் கவனமாக இருக்கும் இந்த நீர்ப்புகாத் திட்டம், ஒரு மிகப்பெரிய மற்றும் சிக்கலான பணியாகும். ஆகஸ்ட் மாத செய்திமடலில் அனைத்துப் பணிகளின் சிறப்பம்சங்களையும் உங்களுக்குத் தெரிவிப்போம்.

மாத்ரிமந்திர் தோட்டங்களின் கிழக்குப் பகுதியில் ஏரி அகழ்வுப் பணிகளுக்காக இடம் ஒதுக்க, மிகப்பழமையான பட்டறைக் கட்டிடங்கள் அனைத்தும் வேறு இடத்திற்கு மாற்றப்பட வேண்டும். உள் அறைக்கான சலவைக்கூடம் போன்ற அவர்களின் பெரும்பாலான செயல்பாடுகளும் சேவைகளும் பாதுகாக்கப்பட வேண்டும். தளத்தில் பணிபுரியும் 150-க்கும் மேற்பட்டோருக்கான உணவு மற்றும் பல்வேறு இதர சேவைகள், அத்துடன் நிர்வாகம், கணக்குப்பதிவு மற்றும் சரக்குக் கிடங்குகளுக்கான அலுவலகங்கள் ஆகிய அனைத்தும், தோட்டங்களின் வடகிழக்கு திசையில், ஏரியின் எல்லைக்குச் சற்று வெளியே அமைந்துள்ள ஒரு புதிய வளாகத்தில் அமைக்கப்பட உள்ளன.
ஆரோவில் கட்டிடக்கலைஞர்கள் அடங்கிய ஒரு குழு, கடந்த சில ஆண்டுகளாக இந்த "சேவை வசதி"க்கான வடிவமைப்பில் பணியாற்றி வருகிறது; தற்போது, இத்திட்டத்திற்காக நியமிக்கப்பட்ட கட்டுமானப் பொறியாளர்களுடனான கலந்தாய்வின் இறுதி கட்டத்தில் அவர்கள் உள்ளனர். கட்டுமானப் பணிகளுக்கான தளம் சீர்செய்யப்பட்டுவிட்டது; இப்பணிகள் இந்த கோடைக்காலத்தில் தொடங்கும் எனத் திட்டமிடப்பட்டுள்ளது.

இப்பணிகள் அனைத்தும்–அத்துடன், 'உள் அறைக்கு' (Inner Chamber) நாள்தோறும் வரும் நூற்றுக்கணக்கான பார்வையாளர்களின் வரவேற்பு மற்றும் ஏரியின் தெற்கு எல்லைக்கு அப்பால் அமைந்துள்ள பொதுவான 'வெளியில் இருந்து பார்வையிடும் இடத்திற்கு' (Viewing Point) வரும் ஆயிரக்கணக்கானோரின் வருகை ஆகியவையும்–மாத்ரிமந்திரில் ஒவ்வொரு நாளும் ஒரே நேரத்தில் நடைபெறும் பன்முகச் செயல்பாடுகளுடன் ஒன்றிணைந்து பின்னிப் பிணைந்துள்ளன.
இங்கு நடைபெற்றுவரும் அனைத்துப் பணிகளின் ஆற்றலால் சூழல் முழுமையும் நிரம்பியுள்ளது; அதே வேளையில், மாத்ரிமந்திரின் வளிமண்டலத்தை ஆட்கொண்டிருக்கும் ஆழ்ந்த அமைதியும் சாந்தமும் சூழல் முழுவதிலும் பரவியுள்ளன. ஒருவர் சற்று நின்று, பரபரப்பான செயல்பாடுகளிலிருந்து விலகி நின்று சிந்திக்கும்போது, ஆரோவில்லின் இதயப்பகுதியாகத் திகழும் மாத்ரிமந்திரைத் தாங்கி நிற்கும் இந்த அற்புத வெளியின் கண்ணுக்குப் புலப்படாத நுண்வெளியை (ether) உணர முடியும்; அப்போது அந்த அமைதியைத் தெளிவாக உணர்ந்துகொள்ள இயலும்.

**நிதி திரட்டுதல்**
"மாத்ரிமந்திர் ஆரோவில்லின் ஆன்மாவாகத் திகழும். அந்த ஆன்மா அங்கு எவ்வளவு விரைவில் குடிகொள்கிறதோ, அவ்வளவு சிறப்பானதாக அது அனைவருக்கும்–குறிப்பாக ஆரோவில்வாசிகளுக்கு–அமையும்." – ஸ்ரீ அன்னை, 15 நவம்பர் 1970.
மாத்ரிமந்திரைக் கட்டி முடிக்கும் இலக்கை எட்ட இன்னும் இரண்டு ஆண்டுகளே எஞ்சியுள்ள நிலையில், நிதி திரட்டுவது என்பது மாத்ரிமந்திர் குழுவின் பணிகளில் மிக முக்கியமான ஒரு பகுதியாக மாறியுள்ளது.
மாத்ரிமந்திரிலிருந்து நாங்கள் ஸ்ரீ அன்னையின் குழந்தைகள் அனைவரையும் நோக்கி எங்கள் கரங்களை நீட்டுகிறோம்.

**திட்டத்திற்கான வரவுசெலவுத் திட்டங்களும் காலக்கெடுவும்**
நாங்கள் உங்களை அணுகுகிறோம்; நிதி திரட்ட உதவும் வகையில், உங்கள் தொடர்பில் உள்ள அனைவரையும் நீங்களும் அணுகுமாறு கேட்டுக்கொள்கிறோம்.
நாம் அனைவரும் கைகோர்த்து இணைந்து செயல்பட்டு, முழுமையாகக் கட்டி முடிக்கப்பட்ட மாத்ரிமந்திரை ஸ்ரீ அன்னையின் பிறந்தநாள் காணிக்கையாக அவருக்குச் சமர்ப்பித்தால், அது எவ்வளவு அற்புதமாக இருக்கும்!
இந்த இலக்கை அடைவதற்குச் செய்ய வேண்டிய பணிகள் ஏராளம்; திரட்டப்பட வேண்டிய நிதியின் அளவும் மிக அதிகம். நீங்கள் காண்பது போலவே, இந்த இலக்கை எட்ட வேண்டுமெனில் பல்வேறு திட்டங்களை நிறைவு செய்ய வேண்டியுள்ளது.

---

## த க வ ல் க ள் ( I N F O R M A T I O N )

### <u>புர்தூஸ் விநியோக மையம் தனது 20வது ஆண்டைக் கொண்டாடுகிறது</u>
### <u>(Pour Tous Distribution Centre celebrates its 20th Anniversary)</u>

அன்பார்ந்த ஆரோவில்வாசிகள், புதிதாய்ச்சேர்ந்தவர்கள் ஆகியோருக்கு,
புர்தூஸ் விநியோக மையம் (பிடிடிசி) தனது 20வது ஆண்டைக் கொண்டாடும் இந்த வேளையில், இந்தக் கூட்டுச்சேவையை இந்த நிலைக்குக் கொண்டு வந்த, மற்றும் கொண்டு வரும் அனைவருக்கும் நன்றி தெரிவிக்க விரும்புகிறோம்.

இரண்டு தசாப்தங்களாக, பிடிடிசி ஒரு எளிய ஆனால் சக்திவாய்ந்த யோசனையின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது: நமது பங்களிப்புகளை ஒன்றிணைப்பது, சிறந்த மற்றும் ஆரோக்கியமான பொருட்களை மொத்த விலைக்கே – கூடுதல் இலாபம் இல்லாமல் – கொள்முதல் செய்வது, மற்றும் அனைவரின் தேவைகளுக்கு ஏற்ப விநியோகிப்பது. பிசிசி எங்களுக்கு மாதாந்திர நிதி ஒதுக்கீடு மூலம் ஆதரவளிக்கிறது. எங்கள் உறுப்பினர்களின் தாராள மனப்பான்மை, அந்தப் பகிரப்பட்ட முயற்சிக்குள் ஒருவருக்கொருவர் ஆதரவளிப்பதை தொடர்ந்து சாத்தியமாக்குகிறது, மேலும் அந்த உணர்வு கொண்டாடப்பட வேண்டிய ஒன்றாகும்.

**ஒரு நினைவூட்டல்: எங்களுக்கு இரண்டாவது விற்பனை நிலையம் உள்ளது**

நீங்கள் இன்னும் வருகை தரவில்லை என்றால், சன்ஷிப்பில், டவுன் ஹாலுக்குப் பின்புறம் எங்களுக்கு இரண்டாவது விற்பனை நிலையம் உள்ளது. இரண்டு விற்பனை நிலையங்களும் உங்களுக்குச் சேவை செய்யவே உள்ளன, எனவே உங்களுக்கு மிகவும் வசதியான ஒன்றைப் பயன்படுத்தவும் – நம்முடைய சமூகத்தில் உள்ள அனைவரும் தங்களுக்குத் தேவையானதைப் பெறுவதை நாங்கள் உறுதி செய்ய விரும்புகிறோம். பிராஸ்பெரிட்டி ஏரியாவில் (சோலார் கிச்சன் அருகே) உள்ள பிடிடிசி காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை திறந்திருக்கும். சன்ஷிப்பில் உள்ள பிடிடிசி தற்போது காலை 9 மணி முதல் மதியம் 1 மணி வரை திறந்திருக்கும்.

**புதிய உறுப்பினர்களுக்கு வரவேற்பு**
எங்கள் விழுமியங்களைப் பகிர்ந்து கொள்ளும் ஒருவரை உங்களுக்குத் தெரியுமா? புதிய உறுப்பினர்கள் எங்களுடன் சேருவதை நாங்கள் அன்புடன் வரவேற்கிறோம். ஒவ்வொரு புதிய குரலும் பங்களிப்பும் நாம் இணைந்து செய்யக்கூடியதை வலுப்படுத்துகிறது.

பிடிடிசி-யின் விழுமியங்களான அக்கறை, நம்பிக்கை, கூட்டு மனப்பான்மை ஆகியவற்றைக் கடைப்பிடித்து, இந்த முயற்சியைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கு நன்றி. இன்னும் 20 ஆண்டுகளுக்கு வாழ்த்துக்கள்.
நன்றியுடன், *பிடிடிசி குழு*

## அ றி வி ப் பு க ள் ( A n n o u n c e m e n t s )

### <u>பாரத் நிவாஸின் அறிவிப்பு (Announcement from Bharat Nivas)</u>

அன்பார்ந்த ஆரோவில் குடியிருப்புவாசிகளே
வரும் 19.05.2026 & 26.05.2026 ஆகிய நாட்களில் செவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்த வழக்கமான வாசிப்பு அமர்வுகள் இரத்து செய்யப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். உங்கள் புரிதலுக்கு நன்றி. 02.06.2026 அன்று நமது வழக்கமான கால அட்டவணையை மீண்டும் தொடங்குவோம் என ஆவலுடன் எதிர்நோக்கியுள்ளோம்.

---

## <u>மாத்ரிமந்திர் உள்அறை மூடல்</u> <u>(Closure of the Matrimandir Inner Chamber)</u>

வருடாந்திர பராமரிப்புப் பணிகள் காரணமாக, **மாத்ரிமந்திர் உள்அறை 2026 மே 18 முதல் 2026 ஜூன் 14 வரை அனைவருக்கும் மூடப்பட்டிருக்கும்**. இதனால் ஏற்படும் சிரமத்திற்கு வருந்துகிறோம்.

**மாத்ரிமந்திர் உள்அறை 2026 ஜூன் 15 அன்று மீண்டும் திறக்கப்படும்.**

மீண்டும் திறக்கப்படும் தேதியில் ஏதேனும் மாற்றங்கள் இருப்பின், தயவுசெய்து இப்பகுதியைத் தொடர்ந்து கவனிக்கவும்.
சாத்தியமிருப்பின், ஆரோவில்வாசிகளுக்கும், புதிதாய்ச்சேர்ந்தோருக்கும் (Newcomers) இந்த அறை முன்னதாகவே மீண்டும் திறக்கப்படும்.
மாத்ரிமந்திரை வெளியில் இருந்து பார்வையிடும் இடம் (Matrimandir Viewing Point) வழக்கம் போலவே தினமும் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை திறந்திருக்கும். அன்புடன், *மாத்ரிமந்திர் நிர்வாகிகள்*

---

## <u>ஆரோவில் நிறுவனங்களுக்கான குறிப்பு</u> <u>(Note for Auroville Units)</u>

பெரும்பாலான நிறுவனங்கள், <u>auroville.org</u> என்ற பிரதான இணையதளத்தில் தமக்கென ஒரு வலைப்பக்கத்தைக் கொண்டுள்ளது. உங்கள் நிறுவனம் மற்றும் சேவைகள் குறித்த விவரங்கள் அதில் விடுபட்டிருந்தால், மேலும் நீங்கள் அதிகாரப்பூர்வ ஆரோவில் இணையதளத்தில் உங்களது நிறுவனம் மற்றும் சேவைகள் குறித்த புதிய பக்கத்தை உருவாக்க விரும்பினால், உங்களது நிறுவனம் எப்போது தொடங்கப்பட்டது, நீங்கள் வழங்கும் சேவைகள் உட்பட ஒரு சுருக்கமான அறிமுக உரையை எங்களுக்கு அனுப்பவும். உங்களது தற்போதைய தொலைபேசி, மின்னஞ்சல் தொடர்பு விவரங்கள், நிறுவனம் திறந்திருக்கும் நேரம் போன்ற விபரங்களை எங்களுக்கு அனுப்பவும். தயவுசெய்து 2 அல்லது 3 சமீபத்திய புகைப்படங்களை (JPEG) வடிவத்தில் தனித்தனி கோப்புகளாக அனுப்பவும்.
எங்கள் இணையதளத்தை <u>https://auroville.org/</u> என்ற இணைப்பில் பார்வையிடலாம். வலைச்சேவை (வெப் சர்வீஸ்)

---

## <u>ஆம்பித்தியேட்டர் - மாத்ரிமந்திர்</u> <u>(AMPHITHEATRE – MATRIMANDIR)</u>

**சாவித்திரியுடன் சூரிய அஸ்தமனத்தில் தியானம்,**
**வியாழன் தோறும் மாலை 6.00 முதல் 6.30 வரை (வானிலை அனுமதித்தால்)**

**01.04.2026 முதல் செப்டம்பர் வரை**, மாத்ரிமந்திர் ஆம்பித்தியேட்டரில், சாவித்திரி உடன் சூரிய அஸ்தமன தியானம் **வியாழன் அன்று நடைபெறும்.** சாவித்ரி, ஸ்ரீஅரவிந்தரின் நீண்ட மந்திரக் கவிதையாகும், சுனிலின் பின்னணி இசையில் ஸ்ரீஅன்னை வாசிப்பில், ஆரோவில்லின் மையத்தில் உள்ள இந்த அழகிய திறந்தவெளியில், அனைவரும் மனத்தை ஒருமுகப்படுத்துவதற்காக வாரந்தோறும் ஒலிபரப்பப்படுகிறது.



- **<u>அனைவருக்கும் நினைவூட்டுகிறோம்:</u>** ஒருமைப் பூங்கா (ஃபார்க் ஆஃப் யுனிட்டி) அமைதி, தியானம், ஆன்மிகப் பயிற்சிக்கான இடமாகும், ஆகவே, இந்த இடத்தை இதற்காக மட்டுமே பயன்படுத்த வேண்டும். அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்: கேமராக்கள், ஐ-பேடுகள், செல்போன்கள் போன்றவற்றைப் பயன்படுத்தக்கூடாது. புகைப்படங்கள் எடுக்கக் கூடாது.
- **ஆரோகார்டு வைத்துள்ள விருந்தினர்கள்** கலந்துகொள்ள விரும்பினால் ஒன்று அல்லது இரண்டு நாட்களுக்கு முன்னதாக <u>https://bit.ly/savitri-reading</u> -இல் உள்ள படிவத்தை முன்பதிவு செய்ய வேண்டும். தயவுசெய்து உங்களின் ஆரோகார்டை உங்களுடன் கொண்டு வாருங்கள்.
- ஆம்பித்தியேட்டருக்கு அலுவலக கேட் வழியாக மாலை 5:45 மணி முதல் மட்டுமே அனுமதி. விருந்தினர்கள் தங்கள் ஆரோகார்டுகளை கொண்டு வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விருந்தினர்களுக்கான கடைசி நுழைவு மாலை 6.00 மணி வரை. ஆம்பித்தியேட்டருக்கு மட்டுமே விருந்தினர்கள் செல்ல முடியும்.

---

## <u>கூட்டு கற்றல் பயணம் - அன்றாட வாழ்வில் பகவத் கீதை</u>
## <u>(Collective Learning Journey - Bhagavad Gita in Daily Life)</u>

அன்பிற்குரியவரே,

**Bhagavad Gita in Daily Life (அன்றாட வாழ்வில் பகவத் கீதை)** எனும் கூட்டு கற்றல் பயணத்திற்கு உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

பகவத் கீதையின் ஞானத்தை நமது அன்றாட வாழ்வில் ஒருங்கிணைத்துக்கொள்ளும் நோக்கில், நம்மில் சிலர் ஒரு **கூட்டு கற்றல் யக்ஞத்தை (பயணத்தை)** தற்போது தொடங்கியுள்ளோம். இக்கற்றல் பயணத்தில், கீதையின் 700 சுலோகங்களையும் அவற்றின் மூலமொழியான சமஸ்கிருதத்தில் நாம் அணுகவிருக்கிறோம்; அத்துடன், தினசரி பயிற்சிகள், ஆழ்ந்த சிந்தனைகள் மற்றும் ஸ்ரீஅரவிந்தரின் 'Essays on the Gita' (கீதை பற்றிய கட்டுரைகள்) மற்றும் ஸ்ரீ அன்னையின் படைப்புகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளை வாசித்தல் போன்ற செயல்பாடுகளும் இதில் இடம்பெறும். அனைவரும் இதில் கலந்துகொள்ள அன்புடன் வரவேற்கப்படுகிறார்கள்.

**தேதிகள்: 2026 ஜூன் 1 முதல் ஜூன் 30 வரை. (திங்கள் - வெள்ளி வரை), நேரம்: காலை 5 மணி* முதல் 6 மணி வரை.**
**இடம்: இணையவழி ஜூம் (Zoom) அழைப்பு**
(*பிரம்ம முகூர்த்தம் என்பது சூரிய உதயத்திற்கு ஒரு மணி நேரம் 36 நிமிடங்களுக்கு முன்பு தொடங்கி, 48 நிமிடங்களுக்குப் பிறகு முடிவடையும், இது வழக்கமான யோகப் பயிற்சிகளை மேற்கொள்வதற்கு மிகவும் மங்களகரமான நேரமாகக் கருதப்படுகிறது.)
கூடுதல் விவரங்களுக்கும், பதிவு செய்வதற்கும் இங்கே கிளிக் செய்யவும்: <u>tinyurl.com/gitainlife</u>
மேலும் ஏதேனும் கேள்விகள் இருப்பின், <u>vidyamandir@auroville.org.in</u> என்ற முகவரிக்கு எங்களுக்கு மின்னஞ்சல் அனுப்பலாம்.
அருளும் நன்றியுணர்வுடனும், *தேவன், ஷாலினி மற்றும் பலர். வித்யாமந்திர், ஆரோவில் சார்பாக*

---

## ஸ்ரீ அரவிந்தரின் உத்தரபாரா சொற்பொழிவை நினைவுகூர்தல் - மே 30
(Remembering Sri Aurobindo's Uttarpara Speech – May 30th)

*1909 மே 30 அன்று வங்காளத்தின் உத்தரபாராவில் நிகழ்த்தப்பட்டது*

அன்பார்ந்த நண்பர்களே,
வரலாற்றில் மே 30-ஆம் தேதி ஒரு மிகச் சிறப்பான நாளாகத் திகழ்கிறது. இது ஸ்ரீ அரவிந்தர் தமது மாற்றத்தை உருவாக்கும் ஆன்மீக உணர்தல்களை உலகத்துடன் பகிர்ந்துகொண்ட, அவரது புகழ்பெற்ற 'உத்தரபாரா சொற்பொழிவின்' ஆண்டு நிறைவு நாளாகும்.

இந்த மரபைச் சிறப்பிக்கும் வகையில், நாங்கள் ஒரு சமூகக் கூடலுக்கு ஏற்பாடு செய்துள்ளோம்; இதில் தாங்களும் உங்கள் குடும்பத்தினரும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிகிறோம்.

நிகழ்வு விவரங்கள்: சிறப்புப் பேச்சாளர்: திரு. ஷ்ரத்தாலு ரானடே. நாள்: மே 30 சனிக்கிழமை | காலை 10 மணி - நண்பகல் 12 மணி. இடம்: சாவித்திரி பவன் - சங்கம் ஹால்.

உங்கள் வருகை, எங்களின் கூட்டுச் சிந்தனைக்கும் பகிர்வுக்கும் அளப்பரிய மதிப்பைச் சேர்க்கும். ஓர் உத்வேகம் நிறைந்த காலைப் பொழுதில் எங்களுடன் இணையுமாறு அன்புடன் அழைக்கிறோம்! *ஒற்றுமையுடன், பண்பாட்டுக் குழு*

---

## சாதனா ஃபாரஸ்ட்டில் வெள்ளிக்கிழமை தோறும் ஈக்கோ பிலிம் கிளப்
(Eco Film Club, every Friday at Sadhana Forest)

நிகழ்வுகளின் அட்டவணை:
16:00 சோலார் கிச்சனிலிருந்து சாதனா ஃபாரஸ்ட்டிற்கு சென்று பார்க்க இலவசப் பேருந்து
16:30 சாதனா ஃபாரஸ்ட்டை சுற்றிப்பார்த்தல்
18:00 சோலார் கிச்சனிலிருந்து சாதனா ஃபாரஸ்ட்டிற்கு ஈக்கோ பிலிம் கிளப்பிற்கு இலவச பேருந்து
18:30 ஈக்கோ பிலிம் கிளப் ஆனது சாதனா ஃபாரஸ்ட் படங்களின் "முன்னோட்டத்துடன்" தொடங்குகிறது
20:00 இரவு உணவு உபசரிப்பு
21:15 சாதனா ஃபாரஸ்ட்டில் இருந்து சோலார் கிச்சனுக்கு திரும்பிவர இலவசப் பேருந்து

திரைப்படத்திற்கு முன், சரியாக 16:30 மணிக்கு சாதனா ஃபாரஸ்ட்டை முழுவதும் சுற்றிப்பார்க்க எங்களின் மிகச் சமீபத்திய பணிகள் குறித்த தகவல்களைத் தெரிந்து கொள்ள எங்களுடன் சேர உங்களை வரவேற்கிறோம்! திரைப்படத்திற்குப் பிறகு, இலவச 100% சைவ இயற்கைமுறை இரவு உணவிற்கு எங்களுடன் சேர உங்களை வரவேற்கிறோம்!

இப்பேருந்து சேவை சாதனா ஃபாரஸ்ட்டால் இயக்கப்படுகிறது. பேருந்து சேவை பற்றிய கூடுதல் தகவலுக்கு சாதனா ஃபாரஸ்ட்டை வாட்ஸ்அப்பில் 8525038274 அல்லது 8122274924 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.
**குறிப்பு: குடும்பங்கள் மற்றும் குழந்தைகள் வரவேற்கப்படுகிறார்கள்! குழந்தைகளுக்கு இரவு உணவு 19:00 மணிக்கு வழங்கப்படும்.

**மே 22 வெள்ளி அன்று - பிளாநெட் எர்த்: கேவ்ஸ் (Planet Earth: Caves) - 2017 / 49 நிமிடங்கள் / அலாஸ்டர் ஃபோதர்கில்**



பூமியின் பெரிய, ஆழமான சுண்ணாம்புப் பாறைக் குகைகளை அணுகுவது கிட்டத்தட்ட இயலாத காரியம். எனவே, அவை அரிதாகவே ஆராயப்பட்டுள்ளன. அவற்றில் பல, வெள்ளம் சூழ்ந்த இடங்களில் நிபுணத்துவம் வாய்ந்த மூழ்கல்களைக் கோருகின்றன. இந்தக் குகைகளில் சில, எம்பயர் ஸ்டேட் கட்டிடத்தையே உள்ளடக்கக்கூடிய அளவுக்குப் பெரியவை! சர் டேவிட் அட்டன்பரோ விவரிக்கும் இந்த அத்தியாயத்தில், குகைகளையும் அவற்றின் கவர்ச்சிகரமான, தனித்துவமான வனவிலங்குகளையும் வந்து ஆராயுங்கள்.

---

## மரோமாவின் பள்ளிகளின் கோடை விடுமுறைக்காலத் திட்டம் (Maroma Summer School Holiday Program)

அன்பார்ந்த ஆரோவில்வாசிகள், விருந்தினர் ஆகியோருக்கு,
குழந்தைகள் மற்றும் குடும்பங்களுக்காக வடிவமைக்கப்பட்ட, செய்முறைப் பயிற்சிகளுடன் கூடிய ஒரு படைப்பாற்றல் நிகழ்ச்சியில், இந்த மே மாதம் மரோமாவில் எங்களுடன் இணையுங்கள்.

**தேதி: மே 27-29 (புதன்-வெள்ளி), நேரம்: காலை 10:00 மணி - காலை 11:30 மணி**

**நிகழ்ச்சியின் சிறப்பம்சங்கள்:**
நாள் 1 - ஊதுபத்தி (மே 27, புதன் அன்று).
நாள் 2 - மெழுகுவர்த்தி செய்தல் (மே 28, வியாழன் அன்று).
நாள் 3 - களிமண்ணால் பொருட்களை உருவாக்குதல் (மே 29, வெள்ளி அன்று).

ஒவ்வொரு அமர்வும், இயற்கைப் பொருட்களைப் பயன்படுத்தி, வழிகாட்டப்பட்ட செய்முறை அனுபவத்தை வழங்குகிறது. இது கைவினைத்திறன், நீடித்தத்தன்மை ஆகியவற்றின் மீது மரோமா கொண்டுள்ள கவனத்தை எடுத்துக்காட்டுகிறது.
பங்கேற்பாளர்கள் எண்ணிக்கை: 20 பேர் மட்டுமே
குறிப்பு: 8 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு கண்காணிப்பாளர்கள் அவசியம்.
பங்கேற்பாளர்களுக்கான இடங்கள் குறைவாகவே உள்ளன, முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் வழங்கப்படும்.

பதிவு செய்ய, maroma@maroma.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு பின்வரும் தகவல்களை உள்ளடக்கி ஒரு மின்னஞ்சல் அனுப்பவும்: பங்கேற்கும் நபர்களின் எண்ணிக்கை, குழந்தை(களின்) வயது, பங்கேற்க விருப்பமான நாள்(கள்)
உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால், 948 6623 749 என்ற எண்ணிற்கு வாட்ஸ்அப்/அழைக்கவும், தயங்க வேண்டாம்.
மேலும், நீங்கள் ஒரு மரோமாவை சுற்றிப்பார்க்க முன்பதிவு செய்ய விரும்பினால், எங்களது இணையதளத்தைப் பார்வையிடவும்: www.maromaexperience.com - *நல்வாழ்த்துக்கள், ஜெஸ்ஸி*

## கினிஸி மின்சார வாகனங்கள் (Kinisi E.moblity)

எங்களது சேவைகள்:
- மின்சார சைக்கிள் (E-Cycle) மற்றும் மின்சார ஸ்கூட்டர் வாடகைச் சேவைகள்:
(விருந்தினர்கள் வாடகைக்கு எடுக்கும் கால அளவைப் பொறுத்து, தேவையின் அடிப்படையிலான கட்டணம்.)
- பதிவு செய்யப்பட்ட நீண்டகாலத் தன்னார்வலர்களுக்குச் சிறப்புச் சலுகைக் கட்டணங்கள்.
- கிம் திட்டம் (KIM): ஆரோவில்வாசிகள், புதிதாய்ச்சேர்ந்தோர், ஆரோவில் நிறுவனங்களுக்கு சிறப்புச் சலுகைகள் வழங்கப்படும்.

**பழுதுபார்த்தல் மற்றும் சர்வீஸ்:**
- அனைத்து வகையான மின்சார சைக்கிள்கள், மின்சார ஸ்கூட்டர்கள், மின்சார பைக்குகளுக்கான முழுமையான பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புச் சேவைகள். (நீங்கள் அவற்றை எங்கு வாங்கியிருந்தாலும் சரி!)
- பேட்டரி, மோட்டார் மற்றும் கன்ட்ரோலர் விற்பனை/மாற்றுச் சேவைகள்.
எங்களைத் தொடர்பு கொள்ளவும்: திறந்திருக்கும் நேரம்: காலை 09:00 முதல் 12:30 மணி வரை & பிற்பகல் 2:30 முதல் 4:30 மணிவரை. ஞாயிறு உட்பட, தினமும் திறந்திருக்கும். கைபேசி : +91 8300460 679/680 - மின்னஞ்சல் : Info@kinisi.in - இணையதளம் : https://kinisi.in/

---

## மார்னிங் ஸ்டார் வழங்கும் - பிரசவத்திற்குப் பிந்தைய மனச்சோர்வு மற்றும் தாய்மார்களின் மனநலம் குறித்த ஒரு சமூகத் திரைப்படக்காட்சி மற்றும் கலந்துரையாடல்

(MORNING STAR presents - A Community Screening & Conversation on POSTPARTUM DEPRESSION and MATERNAL MENTAL HEALTH)

**மோர் தேன் புளு (MORE THAN BLUE). அமெரிக்கா, 2026. இயக்கம்: Julia Marchesi. ஆவணப்படம் | 79 நிமிடங்கள்**
ஆங்கிலம் (ஆங்கிலத் துணை வாசகங்களுடன்)

பிரசவத்திற்குப் பிந்தைய மனச்சோர்வு மற்றும் பிரசவக் கால மனநிலை மாற்றங்களால் பாதிக்கப்படும் தாய்மார்கள் மற்றும் குடும்பங்களின் குரல்களை வெளிச்சம் போட்டுக் காட்டும், ஒரு வலிமையான புதிய ஆவணப்படம்.
30 மே 2026 சனிக்கிழமை, மாலை 5:00 - 7:00 மணி வரை. மல்டிமீடியா சென்டர், டவுன் ஹால், ஆரோவில்.

**நிகழ்ச்சி நிரல்**
மாலை 5:00 - 5:10 மணி. வரவேற்பு மற்றும் ஆவணப்பட அறிமுகம்.
மாலை 5:10 - 6:30 மணி. ஆவணப்படத் திரைப்படக் காட்சி – More Than Blue
மாலை 6:30 - 6:50 மணி - பிரசவத்திற்குப் பிந்தைய மனச்சோர்வு மற்றும் தாய்மார்களின் மனநலம் குறித்த சமூகத்துவருடன் கலந்துரையாடல்.
மாலை 6:50 - 7:00 மணி. நிகழ்ச்சியின் நிறைவு
ஏற்பாடு: மார்னிங் ஸ்டார் (Morning Star)
கண்ணியமான மகப்பேறு பராமரிப்பு • பெண்களின் நல்வாழ்வு • பிரசவத்திற்குப் பிந்தைய ஆதரவு
“அனைவரும் வருக.” *வாழ்த்துக்களுடன், பாலகணேஷ்*

---

## சினிமா பாரடைசோ, மல்டிமீடியா சென்டர், ஆரோவில்

(Cinema Paradiso, Multimedia Center (MMC) Auditorium, Auroville)

*மல்டிமீடியாவில் நடைபெறும் 'சினிமா பாரடைசோ' நிகழ்ச்சிக்கு, சமூகத்தவரை அன்புடன் வரவேற்கிறோம். திரைப்படக்காட்சி தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாகவே கதவுகள் திறக்கப்படும்; திரைப்படம் தொடங்கியதும் கதவுகள் மூடப்பட்டுவிடும் என்பதால், தயவுசெய்து குறித்த நேரத்திற்கு வருகை தரவும். அனைவரின் இரசனைக்கும் இடையூறு ஏற்படாத வகையில், விளக்குகள் அணைக்கப்பட்டிருக்கும்போது திரைக்கு முன்னால் கடந்து செல்வதையோ அல்லது மொபைல் போனைப் பயன்படுத்துவதையோ தயவுசெய்து தவிர்க்கவும். அரங்கிற்குள் உணவு மற்றும் பானங்கள் கொண்டுவர அனுமதி இல்லை.*

**குழந்தைகளுக்கான சிறப்பு திரைப்படக் காட்சிகள்: 25 மே 2026 முதல் 30 மே 2026 வரை**

| | |
|---|---|
| மே 25 திங்கள், பிற்பகல் 1:30 மணி - | • Barbie And The Magic Of Pegasus |
| மே 26 செவ்வாய், பிற்பகல் 1:30 மணி - | • Alice In Wonderland (1951) |
| மே 27 புதன், பிற்பகல் 1:30 மணி - | • Snow White And The Seven Dwarfs |
| மே 28 வியாழன், பிற்பகல் 1:30 மணி - | • The Princess And The Pea |
| மே 30 சனி, பிற்பகல் 1:30 மணி - | • It’s Time for Holidayssss \| Mr Bean |

நாங்கள் பயன்படுத்தும் திரைப்படத் தரமதிப்பீட்டுக் குறியீடுகள், அமெரிக்கத் திரைப்படச் சங்கத்திடமிருந்து (MPAA) பெறப்பட்டவை: G = பொதுவான பார்வையாளர்கள், PG = பெற்றோரின் வழிகாட்டுதல் பரிந்துரைக்கப்படுகிறது, PG-13 = பெற்றோர்களுக்குக் கடுமையான எச்சரிக்கை, R = கட்டுப்படுத்தப்பட்டது (இந்தியத் தரமதிப்பீட்டிற்கு இணையானது: A, அதாவது பெரியவர்களுக்கு மட்டும்), NR = திரைப்படத்திற்குத் தரமதிப்பீடு வழங்கப்படவில்லை / தரமதிப்பீடு எதிர்பார்க்கப்படுகிறது.

மல்டிமீடியா அரங்கில் கருத்தரங்கு அல்லது நிகழ்ச்சியை ஏற்பாடு செய்ய விரும்பினால், mmcauditorium@auroville.org.in என்ற முகவரிக்கு எங்களுக்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

---